சென்னை மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழக

விலை அணா ஒன்று]

Regd.No.M. 5458

[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (23—1—50) வெளியீடு (24—1—50) [இதழ் 149

முதல் மாநாடு

மக்களிடையே மட்டிலா மகிழ்ச்சியும், எழுச்சியும்

—(0)—

"அழகிரி பந்தலில்" பல்லாயிரவர் திரண்ட காட்சி!

மாநாட்டின் முதல்நாள் நிகழ்ச்சிகள்

திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றில் சிறப்பிடம் பெறும் சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு மட்டிலா ஆர்வப் புத்துணர்ச்சி— பேரெழுச்சியினூடே— சென்னை மின்நகக்கண்காட்சிசாலைக்குப் பின்புறம் அமைந்த அஞ்சா நெஞ்சன் அழகிரி பந்தலில் 21ம் நாள் அன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாயிற்று. மாவட்ட மாநாடேயெனினும், மாகாணத்தின் பல்வேறு பகுதிகளினின்றும் எண்ணற்ற இயக்கத் தோழர்கள் திரண்டு வந்திருந்து சிறப்பித்தனர். திருச்சி மாநாட்டை ஓரளவுக்கு விஞ்சுவதாகவே சிறந்து விளங்கிற்று மாநாடு.

சென்னை நகரம் அன்று கண்கொள்ளா சோபிதக் காட்சியினையே அளித்தது. நகரின் எம்மருங்கு நோக்கினும் மாநாட்டைப் பற்றிய பேச்சே; மாநாட்டிடத்தை நோக்கியே பற்பல இடங்களினின்றும் ஆடவரும் பெண்டிரும், மூத்தோரும் இளையோரும், பங்கா ஆர்வமான பணிகளுமாக ஆயிரக்கணக்கில் வந்து திரண்டவண்ணமிருந்தனர். மாபெரும் மைதானத்தில் பெருஞ் செலவில் அழகுற அமைக்கப்பெற்று, பொலிவுடன் திகழ்ந்த பந்தல் அன்று கரை காணமுடியா மக்கள் கடலாகவே காட்சியளித்தது. பதினைந்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் முதல் நாள் மாநாட்டுக்கு வந்திருந்து தங்களது பேருணர்ச்சியையும் ஒத்துழைப்பையும் காட்டிக்கொண்டனர்.

மாகாணத்தலைநகரில் கூடிய பெருஞ்சிறப்புடை மாநாட்டினை வரவேற்றும் இதன் வெற்றிகர நிறைவேற்றத்துக்கு வாழ்த்து தெரிவித்தும் பல இடங்களிலிருந்தும், வெளியிடங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான வாழ்த்துச் செய்திகளும், பாராட்டுத் தந்திகளும் குவிந்தன.

சென்னை 'ராபின்சன் பார்க்கில்' நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கவிழாவுக்குப்பின்னர், நகரில் நடைபெறும் பெரும் மாநாட்டுக் கூட்டம் இதுவே யாகையால், மக்களிடையே நிரம்பித் ததும்பிய உணர்ச்சி-ஊக்கம், உற்சாகம் சொல்லுந்தரமன்று.

சென்னை, ஜன. 22—

சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு நேற்று மாலை 3-30 மணிக்கு ஆரம்பமாயிற்று. மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும், செங்கல்பட்டு, தென்னாற்காடு, வடஆற்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களிலிருந்தும் ஏராளமான தோழர்கள் வந்திருந்தனர். பகல் 12 மணி முதலிலிருந்தே மக்கள் மாநாட்டுப் பந்தலை வந்தடைந்த வண்ணமிருந்தனர். ஏராளமான தாய்மார்கள் உட்பட சுமார் பதினைந்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தனர். பந்தலுக்கு வெளியிலும் ஆயிரக்கணக்கான மக்கள் நின்றுகொண்டு மாநாட்டு நிகழ்ச்சிகளை கவனித்தனர். எங்கு நோக்கினும் மக்கள் கூட்டமும், மாநாடு பற்றின பேச்சாகவுமே யிருந்தது.

மாநாட்டுக்கென அஞ்சா நெஞ்சன் கே. வி. அழகிரிசாமியின் நினைவாக அமைக்கப்பட்ட "அழகிரி பந்தல்", ஒரு அழகிய நகராகவே காட்சியளித்தது. மாநாட்டுப் பந்தலைச் சுற்றிலும், பலவிதமான கடைகளும், சிற்றுண்டிச்சாலைகளும் முதல் உதவி நிலையமும் அமைக்கப்பட்டிருந்தன. இன்னும் குடிதண்ணீர் வசதி மற்ற எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

பந்தலின் முகப்பைச் சிறந்த முறையில் தீட்டப்பட்டிருந்த அழகிரியின் உருவப்படமும், வேலைப்பாடுகளடங்கிய வளைவுகளும் அழகு செய்தன. பந்தலுக்குள் ஆங்காங்கே இயக்கக் கொள்கைகள் பொறிக்கப்பட்ட அட்டைகளும், கவர்ச்சிகரமான முறையில் அமைக்கப்பட்டிருந்தன.

மாநாட்டுத் தலைவர்கள் பந்தலுக்குள் நுழையும்போது, தொண்டர்படையினர் அழகுற அணிவகுத்து நின்று தலைவர்களை வரவேற்ற காட்சி மக்களிடை மாபெரும் உற்சாகத்தை மூட்டிற்று.

சரியாக 4 மணிக்கு மாநாட்டுத் தலைவர் தோழர் சேலம் ஏ. சித்தையன் பெருத்த ஆரவாரத்துக்கிடையே கழகக் கொடியை உயர்த்திவைத்தார்.

பின்னர் தொண்டர்கள்

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

ஏகாதிபத்திய-முதலாளித்வ-சுரண்டல்-பாசிச அரசு மலர்கிறது!

சமுதாயத்தைச் செல்லென அரிக்கும் கோரப் பிரச்னைகள் தீரவேண்டும்

—:(0):—

அனைத்துத் துறைகளிலும் அறிவுப் புரட்சிக்கு அடிகோலுகிறது முன்னேற்றக் கழகம்

—(0)—

சென்னை மாநாட்டு வரவேற்புரைப் பிற்பகுதி

(நேற்றையத் தொடர்ச்சி)

இந்த மாநாடு வரலாற்றுச் சிறப்புப் பெறும் ஒரு மாநாடாகத் திகழும் என்று முன்பே நான் சுட்டிக் காட்டியதற்குக் காரணம், புதிய இந்தியக் 'குடியரசு' ஜனவரி 26ம் நாள் காங்கிரஸ்காரர்களின் அரும் முயற்சியால் அரியணை ஏறுகிறது. இந்தப் புதியக் 'குடியரசு' திராவிடத்திற்குத் தீங்கு இழைக்கும் 'கொடிய அரசாக' இருக்கும் என்ற காரணத்தால் தான். இந்தக் குடியரசுத் தோற்றத்திற்கு ஆதரவு அளிக்கவோ, அடுத்து நிற்கவோ, பாராட்டி மகிழவோ, பற்றுக் கொள்ளவோ இயலாதவர்களாகவோ இருக்கிறோம். குடியரசு மலருவது என்பது, நமக்குக் கசப்பைத் தருவது என்றல்ல. எங்குக் குடியரசு மணங் கமழுவதாயினும் அதற்கு ஆதரவு தருவதேதான் ஜனநாயகப் பண்பிலே நம்பிக்கை கொண்டிருக்கும் நம்முடைய கடமையாகஇருந்துவருகிறது. ஆனால் 'இந்தியக் குடியரசு' என்பது செயல்அளவில் அப்படி அமைந்து, செயலளவில் மாகாண உரிமைகளைப் பறித்து அடக்கி ஆளும் அடக்கு முறையை உட்கொண்ட 'பாசிச' அரசாக இருக்கும் காரணத்தால்தான், அதனை ஏற்றுக்கொள்ள நாம் மறுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். 1947 ஆகஸ்டு 15 வெள்ளையன் வெளியேறுவதா, அல்லது தொடர்ந்து ஆளுவதா என்ற இருநிலைமைகளுக்கிடையில் கொண்டு வந்து விடப்பட்டபோது கழகத்தில் முற்போக்குக் கொள்கை உடையவர்களாக விளங்கிய நாம், வெள்ளையன் வெளியேறுவதைப் பூரணமாக ஆதரித்தோம்— ஆனால் பாசிச மனப்பான்மை கொண்ட மாற்றுக் கட்சியாளருடன் ஒத்துழைக்க முடியாது என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டோம்.

குடியரசு......!

ஜனவரி 26-ம் நாள் ஏற்படும் அரசோ எனில் அது ஜனநாயகப் பண்பைப் பரப்பிடும் — வர்க்கத்திற்கேற்ற, வட்டார உரிமை வழங்கிடும் நல்ல 'குடியரசாக' மலர்ந்தாலும் மலராம்; அல்லது அனைத்துப் பகுதிகளையும் அடக்கி ஆளும் 'பாசிச அரசாக' மலர்ந்தாலும் மலரலாம். இப்பொழுது மலர்ந்திருப்பது குடியரசு அல்ல 'பாசிச அரசு' என்று திட்டவட்டமாகத் தெரிகின்ற காரணத்தால்தான் புதிய இந்தியக் 'குடியரசை'யும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ள முடியாதவர்களாக இருக்கிறோம். அந்த நாளுக்கும், நமக்கும் உள்ள தொடர்பு— தொடர்பின்மையை எப்படி, எந்தவகையில், என்ன அறி

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

பயிர் சாகுபடியில் 'இஞ்செக்ஷன்' முறை!

உற்பத்திப் பெருக்கத்துக்கு மோட்டார் மன்னர் யோசனை

சென்னை, ஜன. 21—

தன் தோட்டத்தில் வாழை, ஆரஞ்சு, பருத்தி இதர நவதானிய வகைகள் இவைகள் விஷயத்தில் தான் சில ஆராய்ச்சிகள் செய்து பார்த்ததாகவும், அதன் மூலம் அவைகள் அதிக பலன் தரும்படி செய்ய முடியும் என்பதைத்தான் அறிந்ததாகவும் கோயமுத்தூரின் பிரபல கைத்தொழில் முதலாளி தோழர் ஜி. டி. நாயுடு குளோப் நிருபரிடம் விளக்கிக் கூறினார்.

இவர் தன் ஆராய்ச்சி மூலம் தொழில் துறையில் பல விஷயங்களைக் கண்டு பிடித்திருப்பதுடன், மேல் நாடுகளுக்குச் சென்று பல அரிய விஷயங்களை அறிந்துவந்தவர்.

அவர் தன் தோட்டத்தில் நடத்திய ஆராய்ச்சிகள் குறித்து கூறியதாவது:—

வாழை மரங்களின் அடிப்பாகத்தைத் துப்பாக்கியில் சுட்டேன். அதனால் ஏற்பட்ட துவாரத்தில் பூமி சத்துக்களை வைத்து அடைத்து வைத்தேன் இம்மரங்கள் பழம் கொடுக்கத் தொடங்கியபோது ஒரேமரத்தில் பல பழங்கள் வெவ்வேறுருசியாக இருந்தன. ஆனால் ஒவ்வொரு பழமும் பழுப்பதில் ஒரு மாதம் வித்தியாசமிருந்தது இந்த முறையில் வெற்றி கண்டபடியால் இந்த 'இஞ்செக்ஷன்' முறையை ஆரஞ்சு மரத்தில் செய்து பார்த்தேன். ஆனால் அதன் ருசி கசப்பாக இருந்தது. பின்னர் இந்த ஆராய்ச்சியை நவதானிய பயிர் வகைகளில் நடத்தினேன். அப்பயிர்கள் சாதாரணமாக வளருவதைவிட இந்த ஆராய்ச்சியின் விளைவாக இரட்டிப்பாக வளர்ந்தன; நல்ல பலனும் கொடுத்தன.

பருத்திச்செடிகள் இந்த ஆராய்ச்சி மூலம் நன்கு வளர்ந்து முதல் விளைச்சலில் 12பவுண் பருத்தியும், பின்னர் ஒவ்வொரு விளைச்சலிலும் 6 பவுண்ட் பருத்தியும் கொடுத்தது.

இவ்வாராய்ச்சியை தான் தொடர்ந்து நடத்திவருவதாகத் தோழர் நாயுடு கூறினார்.

மாலை மணி

சென்னை 23—1—50 திங்கட்கிழமை

அழிவை நோக்கி ஐ. நா...!

ஐ. நா. அமைப்பை விட்டே ரஷ்யாவும் அதன் துணை நாடுகளும் வெளியேறித் தனித்துக் கொள்ளத் தீர்மானித்து விட்டதற்கான அறிகுறிகள் தென்படுகின்றனவென்று லண்டன் 'டெய்லி ஹெரால்டு' பத்திரிகை கூறுகிறது. ஐக்கியநாடுகள் ஸ்தாபன சம்பந்தமான ஒன்பது அமைப்புகளிலிருந்து ரஷ்யா 'வாக்—அவுட்கள்' நடத்தியிருக்கிறது. ரஷ்யப் பிரதிநிதி தோழர் மலிக் போக்கைப் பார்த்தால், அனைத்து ஐ. நா. அமைப்புகளையும் அவர் 'பகிஷ்கரிக்க'த் துணிந்துவிட்டாரெனக் கருதப்படுகிறது. ஐ.நா. ஸ்தாபனத்திலிருந்து தேசீய சீனாவின் பிரதிநிதி விரட்டப்படும்வரை விரட்டப்படாத பட்சத்தில் தான் சபை நடவடிக்கைகளில் கலந்து கொள்வதில்லையென ரஷ்யா தீவிரமான முடிவு செய்துவிட்டது. இந்த நிலையில் லேக்-சக்ஸஸில் குழப்பம் குளறுபடி உச்சநிலையிலிருந்து வருகிறது.

சமாதானத்தைத் தழைய வைக்கத்தோன்றிய ஐ. நா இவ்வண்ணம் சட்டலாட்டத்தைத் துவக்கி, சா[illegible] வழியமைத்து வருகிறது. முதலாளித்துவ நாடுகளுக்கும் ரஷ்யாவுக்குமிடையே நீண்ட நாளாக நிலைபெற்றிருந்த தகராறு இன்று பெருத்த அளவில் கொழுந்து விட்டெரியத் துவங்கி விட்டது. இரு வேறு முனைகளுக்குமான எதிர்பார்த்த தாக்குதல் 'சீனப் பிரச்னை'யினூடே பெருகிக் கொண்டு நிற்கிறது. சீன சர்க்கார் பிரதிநிதி ஐ. நா. வில் யாரென்பது பற்றியே இன்று தகராறு என்பது மேலெழுந்தவாரியாக நமக்குத் தோன்றிய போதிலும், ஐ. நா. வில் இப்போது நேரிட்டுவரும் நெருக்கடிக்கு அடிப்படையான காரணம் என்றும் நிலைத்து வந்திருப்பதேயென்பதை யாரும் மறக்கமுடியாது. உலகில் அமைதி, சமாதானம் நிலவ சரியான மார்க்கம் என்னவென்பதில்—கொள்கை, கோட்பாடு விளக்கம், நிறைவேற்றத்தில் சோவியத் ரஷ்யாவுக்கும் அமெரிக்க போன்ற முதலாளித்வ நாடுகளுக்குமிடையே பெருத்தவேறுபாட்டை ஏன், மாறுபாடே-இன்று சீனப் பிரச்னை மூலம் தெளிவு பெற்று நிற்கிறது. அமைதியைக் காக்க வந்த ஐ. நா. அமெரிக்காவுக்குத் துதி பாடுகிறது!

கம்யூனிஸ்டு சீனாவுக்கு அமெரிக்காவின் அங்கீகாரத்தையும், பிரான்ஸின் பேராதரவையும் ரஷ்யாவோ, குறிப்பாக மாசேதுங்கோ விரும்பிவேண்டி நிற்கவில்லையெனினும், சர்வதேசப் பொது ஸ்தாபனம் என்று கூறிக்கொள்ளப்பெறும் ஒரு அமைப்பில் செல்லாக்காசுக்குள்ள செல்வாக்குக் கூட இல்லாத ஒரு சர்க்காரின் பிரதிநிதியாயில்லாத ஒரு பிரதிநிதி, — தலைமையேற்று நிற்பதென்றால், ஐ. நா. சபை கொட்டுமுழக்கோடு அவரை சிறப்பிப்பதென்றால், சிரிப்புக்குரிய கேளிக்கூத்தல்லவா இதுவென்றுதான் ரஷ்யா கேட்கிறது. இக்கூற்றை நம்மால் நன்கு புரிந்து கொள்ள முடிகிறது. புரிந்துகொள்ள முடிவது மட்டுமல்ல, ரஷ்யாவின் இவ்வறிவுடன்பட்ட கோரிக்கையை வரவேற்கவும் செய்கிறோம்.

இல்லாத சர்க்காரொன்றை இருப்பதாகக்கொண்டு, அதற்குப் பிரதிநிதித்வ மரியாதையும் அளிக்கத் தவருது, சாதாரண பொது அறிவையும் நிராகரித்து அவமரியாதை செய்திருக்கும் ஐ. நா. வின் இப்போக்கால் சிக்கல் மேலும் மேலும் நேரிட்டுக்கொண்டே போக வாய்ப்பேற்பட்டுவிட்டதே தவிர, எந்த வகையிலும் குறைய வழிகுறியைக் காணோம். இக்குழப்பமானநிலையில் கம்யூனிஸ்டு சீனா, ஐ. நா. வுக்கும்பாதுகாப்பு சபைக்கும் தனதுபிரதம பிரதிநிதியொருவரை நியமித்து ஐ.நா தலைமை நிலையத்துக்குத் தகவல் தந்துவிட்டதாக அறிகிறோம். பிரபல கம்யூனிஸ்டு தலைவர் சாங் வென்—டைன் இப்பதவிக்கு நியமிக்கப் பட்டுள்ளதாகவும், அவர் விரைவில் பீபிங்விட்டு லேக்சக்ஸஸுக்குப் புறம்படுவாரென்றும் தெரிகிறது. செஞ்சீனாவின் பிரதிநிதி சர்வதேசமன்றஞ் சேர்ந்ததும், சியாங்கின் பிரதிநிதியாக அங்கு வீற்றிருக்கும் 'செல்தாக்காசின்' நிலையென்னவாகுமென்பதையும், அமெரிக்கா போன்ற நாடுகளின் போக்கு எதுவாயிருக்குமென்பதையும் இப்போது யூகிக்க நம்மால் இயலவில்லை. அமெரிக்காவினுடையவும் அதற்கு வால்பிடிக்கும் நாடுகளுடையவும் 'மெஜாரிட்டி'யால் காலந்தள்ளும் சியாங் பிரதிநிதி இப்போது இறக்கிவெளியேற்றப்பட்டு விடுவாரென்பதற்கான தகைய உறுதிப்பாட்டையும் காணோம். வியட்நாமின்பொறுப்புள்ள சர்க்காராக ஹோ-சி-மின்ஹ் போட்டி ஆட்சியைச் செஞ்சீனா அங்கீகரித்திருப்பது பிரான்ஸுக்குப் பெருத்த மனக்கொதிப்பை வேறு ஏற்படுத்தியிருக்கலாம்.

இதனால் செஞ்சீனாவைப் பிரான்ஸ் அங்கீகரிப்பதும், சியாங் பிரதிநிதியை எதிர்த்து வோட் செய்வதும் தடைப்படலாம். பணதிபத்திய அமெரிக்காவுக்கு இது நல்லதொரு 'வாய்ப்பாக' மாறலாம். நெருக்கடி முற்றலாம் — நேர்மை சிதையலாம்- அழிவை நோக்கலாம் ஐ. நா. அமைப்பு!

நன்றியறிதல்

பொங்கல் விழா வாழ்த்து செய்திகள் திராவிட நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல கழகங்கள் சங்கங்கள் பல தனிப்பட்ட நண்பர்களிடமிருந்தும் வந்தன. அவைகளுக்கு எனது மனமார்ந்த நன்றி! தனி தனியே எழுதாமைக்கு மன்னிக்கவும்.

இங்ஙனம்
பி. பழனிச்சாமி
பெத்தாம்பாளையம்

கவலையை ஒழித்துக் கட்ட...

காலிபோர்னியாவில் ஆராய்ச்சி

நியூயார்க், ஜன 21— கவலை ஏற்பட்டால் என்ன மாறுதல்கள் மனிதனிடமே ஏற்படுகிறது, அதை ஒழிக்கவழி ஏதாவது உண்டா என்பது குறித்து விசேஷமாக காலிபோர்னியா சர்வகலைக் கழகத்தைச்சேர்ந்த மனோதத்துவ வல்லுனர்கள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

கவலை ஏற்பட்டால் அதனால் ரத்தக்குழாய்கள், தசைகள், மற்றும் இதர உடலின் உறுப்புகளில் மாறுதல்கள் ஏற்படுகின்றன வென்று டாக்டர் ருஷ் என்பவரும் டாக்டர் ரோடனீயும் கூறுகின்றனர்.

அவர்கள் மேலும் கூறுவதாவது: கவலை என்பது தொத்து வியாதியைப் போன்றது. அதை எவ்வளவுதான் வெளிக்கு காட்டாமல் மறைக்க முயன்றாலும் முகபாவம் மாறுவது [illegible] சம்பூர்ண இவைகளில் அது வெளிப்பட்டுவிடும்.

சிலர் மனதில் கவலை ஏற்பட்டால், அதிகமாக உண்பது மூலமோ சிகரெட் பிடிப்பது மூலமோ குடிப்பது மூலமோ அதை நீக்க முயல்கிறார்கள். மற்றும் சிலர் வெளியில் சென்று பேர்களுடன் தாராளமாகப் பழகி கவலையை மறக்கமுயல்கின்றனர்.

கவலையைத் தீர்க்க உள்ள ஒரே வழி தன் மனக்கவலையைப் பிறரிடம் பகிர்ந்துகொள்வதேதான். மனதைவிட்டு விஷயத்தை வெளியே சொல்வதாலேயே பாதிக் கவலை தீர்ந்துவிடுகிறது.

கவலை தொத்து வியாதி என்று ஒப்புக்கொண்ட இந்த டாக்டர்கள் கவலையை வெளியிடுவதால் பிறரையும் கவலைக்கு ஆளாக்குவது சரியா என்பதுபற்றி இவர்கள் எதுவும் சொல்லவில்லை.

அறிவுக் கதிர்!

எதேச்சாதிகாரம் சர்வாதிகாரம், வேறு எந்த நாட்டையும் விட இங்கு அதிகமான அளவில் வளர்ந்து கொண்டு வருகின்றன, நம்மை நடுங்க வைக்கும் வகையில்! காரணம், கருத்துக்கள், எண்ணங்கள் ஆகியவைகளுக்குப் பதில் அவைகளைக் கூறிய மனிதர்களுக்கே நாம் அதிக முக்கியத்வம் கொடுத்து வருகிறோம்.

— டாக்டர் பராஞ்சிபே

அநீதிக்கும் பலாத்காரத்துக்கும் அடிபணியோம்

போர்மூண்டால் இந்திய உபகண்டம் வேறோர் கொள்கைக்கு இரையாகும்

இந்திய ஏகாதிபத்தியத்தின் கீழ் இருப்பதைவிட ரஷியாவின் கீழிருப்பதே மேலாம்

பெரோஸ்கான் நூன் ஆத்திரப்படுகிறார்!

காஷ்மீர் பிரச்னை பொதுஜன வாக்கெடுப்பு மூலம் முடிவு செய்துகொள்ளலாமென்று உடன்பாடு ஏற்பட்டிருந்த போதிலும், பிரச்னை விரைவில் தீருமென்று தோன்றவில்லை. சமாதான முறையில் தகராறைத் தீர்த்துக் கொள்ள முயல்வோம், ஆனால் பலாத்காரத்துக்கோ அநீதிக்கோ அடிபணியமாட்டோம்.

காஷ்மீர் பிரச்னை காரணமாகப் போர் மூளுமானால் மேற்கு நாடுகளின் நோக்கத்துக்கு முற்றிலும் மாறுபட்ட முறையில் இந்திய உபகண்டம் முழுவதும் வேறொரு கொள்கைக்கு இறையாகிவிடும். என்று மேற்குநாடுகளை எச்சரிக்கை செய்கிறேன்.

ஜனநாயக நாடுகள் என்ன சொன்னாலும்சரி, பாக்கிஸ்தான் இந்தியாவின் கீழ் ஒரு மாகாணமாக இருப்பதைவிட ரஷியாவின்கீழ் ஒருமாகாணமாக இருப்பதையே பாக்கிஸ்தான் மக்கள் விரும்புவர் என்று கூறுவேன்.

காஷ்மீர் பிரச்னையில் ஐ. நா. பரிகாரம் தேடித்தரும் என்று நாம் எண்ணிக் கொண்டிருப்போமானால் அது வீண் நம்பிக்கைதான் என்று வருத்தத் தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். பாதுகாப்புகவுன்சில், அமெரிக்கா பிரிட்டன் என்னும் இருவல்லரசுகளிடமும் ஒரு பொம்மை போல இருக்கிறது. அவை இரண்டும் இந்தியாவின் கட்சியையே ஆதரிக்கின்றன. அமெரிக்கா, இந்தியாவை ஆதரிப்பதற்குக் காரணம், கம்யூனிஸத்தின் மீது அமெரிக்காவுக்குள்ள பயம். பிரிட்டன், காமன்வெல்தைப் பலப் படுத்திக் கொள்வதற்காக இந்தியாவை ஆதரிக்கிறது.

இவை, அண்மையில் பாக்கிஸ்தான் மாகாண மன்றத்தில் தோழர் பிரோஸ்கான் நூன் வெளியிட்டிருக்கும் கருத்துக்களாகும். பிரோஸ்கான் நூனின் கருத்துக்கள் ஒரு புறமிருக்கட்டும், அதற்கு அடிப்படையாக அமைந்துள்ள காரணம் ஐ. நா. சபையின் போக்கே என்பதை விளக்க இச்செய்தி ஓர் எடுத்துக் காட்டாகும்.

பாரசீகத்தில் மேலும் பலட்யூடேக்கள் கைது

டெஹரான், ஜன. 21— பாரசீகத்தில் மேலும் பல ட்யூடே கட்சியினர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். ஷாவைக் கொல்ல ட்யூடே கட்சியினர் முயன்ற விவரம் வெளியான பின்புதான் தடை செய்யப்பட்ட அக்கட்சி மீது [illegible] செலவிடப் படும் என்று தெரிகிறது.

இமாலய ஆராய்ச்சிக்கு பிராஞ்சுக் குழு

பாரீஸ், ஜன 20— இமாலயத்தில் ஒரு பகுதியான தவளகிரியை ஆராய்ச்சி செய்வதற்காக பத்து பேர்கள் அடங்கிய ஒரு பிரெஞ்சுக் குழு மார்ச் மாதக் கடைசியில் [illegible] என்ற இடத்தை விட்டுப் புறப்படுவர் என்று தெரிகிறது.

முன்பு இமாலயத்திற்குச் சென்ற பிரெஞ்சுக் குழுவில் இருந்தவரான [illegible], ஒரு சினிமா காமிராமேனும், ஒரு டாக்டரும் இக்கோஷ்டியில் இருக்கின்றனர்.

மலை மீது ஏறுவதுடன் மட்டுமின்றி அங்கு கிடைக்கும் மூலிகைகளைச் சேகரிக்கவும், பிராணவாயு முகமூடியுடன் எவ்வளவு உயரம் வரை மேலே போகமுடியும் என்பதை ஆராயவும் இக்குழு முயற்சி செய்ய உத்தேசித்திருக்கிறது. இக்குழுவினர் மூன்று மாத காலம் வரையில் இமாலய பகுதியில் தங்கியிருப்பர்.

சீன - பிரிட்டிஷ் உடன்படிக்கை

ஹாங்காங், ஜன. 21— பிரிட்டிஷாருக்கும் சீனாவுக்குமிடையே ஏற்கனவேயுள்ள விமான ரயில்வே போக்குவரத்துகள் பற்றிய உடன்படிக்கைகளை சீனக் கம்யூனிஸ்டுகள் ஏற்க மறுப்பதால் புது உடன்படிக்கைகள் செய்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

ஹாங்காங் ஷாங்கே பாங்கிங் கார்ப்பரேஷன் உள்பட பல பிரிட்டிஷ் பாங்கிகள் சீனத் தேசிய ஸ்தாபனங்களின் கணக்கு [illegible] முடக்கிவிருக்கின்றன. 6 பாங்கிகள் புது சீன சர்க்காரை அங்கீகரித்திருக்கின்றன.

சென்னை உணவு மந்திரி டெல்லிக்குக் காவடி!

சென்னை மாகாணத்திற்கு மத்திய சர்க்கார் ஒதுக்கியுள்ள மூன்று லட்சம் டன் உணவு தானியம் எந்த வகையிலும் போதுமானதல்லவென்றும், தற்போதைய நெருக்கடி நிலையில் இது மிக மிகக் குறைவானதாகுமென்றும் டெல்லியில் நடந்த உணவு மாநாட்டில் கலந்துகொண்டிருந்து சென்னை திரும்பியுள்ள உணவு மந்திரி தோழர் ஜே. எல். டி. ரோச் விக்டோரியா குறிப்பிட்டார்.

இன்னும் ஒரு மாதம் கழித்து, சென்னை சர்க்கார் மீண்டும் டெல்லிக்கு விண்ணப்பித்துக்கொள்ளுமென அவர் மேலும் குறிப்பிட்டார்.

கிணறு வெட்டும் உழவுத் திட்டம்

கடந்த டிசம்பரில் நிறுத்தப்பெற்ற கிணறு வெட்டும் உழவுத் திட்டத்தை மீண்டும் அமுலுக்குக் கொணரவேண்டுமென சென்னை சர்க்கார் கட்டளை பிறப்பித்துள்ளனர்.

வரட்டு வேதாந்திகளின் மாயா வாதங்கள் மண்தூர்த்துப் போகட்டும்!

பொங்கல் திருநாளில் புத்துலகக் கருத்தறிவோம்!

(0)

இலங்கையில் பகுத்தறிவுப் பிரசாரம்!

“கடந்த ஆண்டினை இந்த நாட்டிலே பொங்கல் விழா ஒ மதத்தினரின் சார்பாகவே கொண்டாடப்பட்டு வந்தது ஆனால் அறிவுப் புரட்சி செய்யும் அண்ணா மன்றத்தினரால் இவ்வருடம் இப்பொங்கல் விழா மதசார்பற்ற தமிழ் பேசும் மக்களின் பொது விழாவாகக் கொண்டாடப்படுவதைக் கண்டு யான் பெரிதும் மகிழ்கின்றேன் இவ்விழா கொண்டாடும் விஷயத்தில் இம்மன்றத்தினருக்குப் பல இன்னல்கள் விளைந்திருப்பதாக நான் அறிகிறேன். எனினும் இன்னல்களை எதிர்த்து இவர்கள் இவ்விழாவைக் கொண்டாடுவது பாராட்டத்தக்கதே.

உழைப்பாளிகளின் உன்னத விழா பொங்கல் விழா. மதியும் மாண்பும் [illegible] தமிழரின் மகத்தான விழா இப்பொங்கல் விழா. ஏன், தமிழரின் தனித் திருநாள் என்று கூறினும் அது மிகையாகாது.

இல்லங்கள்தோறும் பால் பொங்குவதுபோன்று உங்கள் உள்ளங்களிலும் இன்பம் பொங்கட்டும். மூட நம்பிக்கைகள் மறைந்து, பகுத்தறிவு மலரட்டும்” என்று கடந்த 14-ந் தேதி சனிக்கிழமை கொழும்பு மைதானத்தில் [illegible] அண்ணா மன்றம் பொங்கல் விழாவில் தோழர் பொ. [illegible] அவர்கள் தமது தலைமை உரையில் எடுத்துக் கூறினார்.

அதன் பின் பேசிய தோழர் [illegible] அறிஞர் பொங்கல் விழாவின் தத்துவங்களை அழகாகப் பொதுமக்களுக்கு எடுத்துரைத்தார். அதன் பின் தோழர்கள் எம். கே. தம்பி, ஜே. [illegible] (ஆசிரியர் சேனை மணி) ஆகியோர்கள் இப்பொங்கல் திருநாளில் புதுக் கருத்துக்கள் நாட்டு மக்களிடையே பரவ வேண்டும் என்றும், வரட்டு வேதாந்திகளின் மாயாவாதங்கள் மறைந்து, மக்கள் மாண்புடன் வாழ்வதற்கேற்ற திட்டங்களை அமைக்க வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்கள். அதன்பின் பேசிய தோழர் [illegible] அவர்கள் இவ்விழாவைக் கொண்டாடுவதற்குப் பல எதிர்ப்புகளை நாம் சமாளிக்க வேண்டியிருந்தது என்றும், ஆரம்பத்தில் ஒத்துழைப்போம் என்றவர்கள் ஏதோ ஓர் அச்சத்தின் காரணமாக எம்முடன் ஒத்துழைக்க முன் வரவில்லை. அண்ணா மன்றம் என்றாலே இந்நாட்டில் சிலருக்கு ஒரு அச்சம் ஏற்படுகிறது ஏன் இந்த அச்சம்? எங்கள் வசதிகளின் அனுபவ [illegible] உங்களை அழிப்பதற்கு எங்களிடம் ஆயுதங்கள் கிடையாது, ஆனால் எங்களிடம் ஒரே ஒரு ஆயுதம் தான் உண்டு. அதுதான் பகுத்தறிவுப் பிரசாரம். எங்களை எதிர்த்தவர்கள் சிலர் இந்த நாட்டிலே வரியும் [illegible]

[illegible] பொது மக்களால் போற்றப்படுபவர்கள் காலி உடை அணி [illegible] நாடி வளர்ப்பவர்களுக்கு வேதாந்திகளாகி விட்டார்கள். அவர்களிடத்தில் ஞானம் பிறக்காது. ஒருவேளை அவர்கள் நாடிகளில் [illegible] எதிர்ப்போர் பார்வையில் உள்ளவர்கள். எல்லோரும் உண்மையில் பெரியர்களாகிவிட்டார்கள், எங்களை எதிர்ப்பதன் மூலம் எங்கள் மன்றத்தை ஒழித்துவிடலாம் என்று கனவு கண்டார்கள். ஆனால் இன்று எவ்வித எதிர்ப்புகளைத் தாங்குவதற்கும் அண்ணா மன்றத்திற்கு உண்டென்பதை அறிந்து கொண்டார்கள் அச்சம் தவிர்த்தே அறிவு புரட்சி செய்யும் இவ்வண்ணா மன்றத்தை ஆரம்பித்தோம். அது அழியவில்லை. ஒரு சமயம் [illegible] அழிக்கலாம். ஆனால் எங்கள் லட்சியங்களை இந்நாட்டு இளைஞர்கள் உள்ளத்தில் பூத்துக் குலுங்கும் புது கருத்துக்களை அழிக்க முடியாது. நாம் செய்வது தவறானால் இப்பெரியார்கள் ஏன் [illegible] அதைக் கண்டிக்கலாமே? அதையும் [illegible] ஒரு பொது மேடை அமைக்கிறோம். அதில் இப்பெரியார்கள் எங்களுடன் [illegible] நடத்தட்டும். அப்பொழுது வேற்றுமையும் [illegible] பொதுமக்கள் வரிந்து கொள்வார்கள் என்று தம் உரையில் குறிப்பிட்டார்.

சற்றுத் தோழர் ராயப்பு (செயலாளர் அண்ணா மன்றம்) உழைப்பவனுக்கே உரிமை உண்டு தனிப்பட்டவனுக்கல்ல என்ற அடிப்படையில்தான் இந்த விழாவை நாம் கொண்டாடுகின்றோம். [illegible] மற்ற பொதுவிழாவாக விளங்க வேண்டும் என்பதே நமது நோக்கம். பார்ப்பனர் காட்டும் பணம் பறிக்கும் விழா அல்ல இது. உழைப்பாளர் வருத்தம் தீர்க்கும் விழா. இவ்விழாவில் கலந்துகொண்ட அன்பர்களுக்கும் நம்பேச்சாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கிறேன் இன்று நீங்கள் ஒத்துழைத்தது போல எதிர்காலத்திலும் ஒத்துழைப்பீர்கள் என்று நம்புகின்றேன் என்று தமது உரையில் தெரிவித்தார். அதன்பின் [illegible] நன்றியுரையுடன் கூட்டம் இனிது கலைந்தது.

ஜப்பானிய போர்க் கைதிகள்பற்றி பேச ரஷ்யா மறுப்பு

டோக்கியோ, ஜன. 20—

தன்னிடமுள்ள ஜப்பானிய போர்க் கைதிகளைப்பற்றிப் பேச ரஷ்யா மறுத்துவிட்டது என்றும், நேச சபையிலிருந்து ரஷ்யா பிரதிநிதி வெளியேறியதற்கு இதுவும் ஒரு காரணம் என்றும் கூறப்படுகிறது.

பெல்ஜியமும் என்ற பெருங் [illegible] ஒன்றை வியூக்ஸர் [illegible] இருந்து [illegible]. உலகிலேயே மிகவும் கனமான வண்டி இதுதானாம்.

இந்தியாவின் கையில் உலகின் எதிர்காலம்!

(0)

அமெரிக்காவுக்குத் தூபம்!

நியூயார்க், ஜன. 20—

உலகின் எதிர்காலம் இந்தியாவையே பொறுத்திருக்கிறது என்றும் அங்கு ஜனநாயகம் பரப்ப அமெரிக்கா உதவி செய்ய வேண்டும் என்றும் ‘கிருஷ்டியன் ஸயன்ஸ் மானிட்டர்’ பத்திரிகையில் ஹரிஸன் ஸாலிஸ்பரி என்பவர் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதில் கூறப்பட்டிருப்பதாவது:- இந்த சோதனை, உலகினருக்கு நான் அதிகரித்து வருகிறது. ஆனால் இந்தியர்கள் வயிற்றிற்கில்லாமல் பட்டினி கிடந்து சாகிறார்கள் இந்த நிலைமை நீடித்தால் இன்று சீனர்கள் மாறியதுபோல் இந்தியர்களும் ஒருநாள் மாறிவிடலாம்.

அமெரிக்காவின் உபரி சோற்றுத் [illegible] வசதியுள்ள நாடுகள் எதுவும் இல்லை. பண்டிதர் [illegible] எத்தனை யு. எஸ். சர்க்கார் விவசாயி [illegible] வாங்கி குவித்து வருகிறது. [illegible] சேமித்து வைப்பது போல் கோதுமை [illegible] செய்துவைக்க முடியாது. அப்படிச் செய்தால் அவ்வளவும் வீணாகி, கெட்டு யாருக்கும் பலனில்லாமல் போய் விடும்.

[illegible] பாதுகாத்துக்கொள்ளவும்; இந்த நாடுகளைப் பலப்படுத்தவும் லட்சக்கணக்கான டாலர்களை நாம் செலவிட்டு வருகிறோம். ஜனநாயக வெற்றிக்கான [illegible] அணுகுண்டினால் கடத்த முடியாது. பட்டினியை ஒழிப்பதின் மூலமேதான் நீக்க முடியும்.

இந்தியாவில் மனிதவர்க்கத்தினரால் ஐந்தில் ஒரு பகுதியினர் இருக்கின்றனர் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இந்த ஐந்து பாகத்தில் மற்றொரு பகுதியான சீனர்கள் கம்யூனிஸ்டுகளாகிவிட்டனர். அப்படியிருந்தும் அமெரிக்கா இன்னும் மேற்கு ஐரோப்பாவையே கட்டிக் கொண்டு மாரடிக்கிறது. அமெரிக்காவின் தாராளம் இந்தியாவை எட்டவில்லை, இந்தியாவுக்கு டாலர் கடன்களைக் காணோம். கடன் குத்தகைத் திட்டத்தை காணோம், மார்ஷல் திட்டத்தைக் காணோம்.

போர்க் கப்பல்களையும் அணுகுண்டுகளையும் உற்பத்தி செய்து சேமிப்பதைவிட கம்பியூனிஸ்ட் [illegible] கோதுமையைக் கொண்டே உலகில் சமாதானம் நிலவ வழி தேட முடியுமே இப்படிச் செய்வதின் மூலம் இந்தியாவில் ஜனநாயகம் பலம் பெறும்படி செய்யலாம். மனிதர்களின் காலுக்கும் உதவியதாக இருக்கும்.

மதிப்புரை

திராவிடன் (பொங்கல் மலர்)

[ஆசிரியர்: என். வி. நடராசன்; கிடைக்குமிடம்: 18 பொன்னப்ப முதலித் தெரு சென்னை 1 விலை ரூ 1]

‘திராவிடன்’ பொங்கல் மலர் வரப்பெற்றோம். மலரின் முகப்பை தோழர் கண்ணுத்துரையின் படம் அலங்கரிக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக எழுத்தாளர் பலரின் கருத்தோவியங்கள், புகைப்படங்கள் இடம்பெற்றுள்ளன. சிறுகதைகள், இனிய கவிதைகள், கருத்தைக் கவரும் கட்டுரைகள். மறைந்த மாவீரர்களின் நிழற்படங்கள் ஆகிய அனைத்தும் நிறைந்த இவ்வழகிய பொங்கல் மலர் இதன் ஆசிரியர் நடராசன் அவர்களின் அரும்பெரும் முயற்சியின் பயன் என்பதை நன்கு குறிப்பிடத்தக்கது. இப்பொங்கல் மலர் மற்ற மலர்களைப்போல் ஆடம்பரம் ஆசிரியில்லாவிடினும் கருத்தமைப்பிலும் இனிய முறையிலும், குறைந்த விலையிலும் தயாரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆசிரியரின் இம்முயற்சி பாராட்டற்குரியது. படித்துப் பயன் பெறத்தக்கவர்.

* * *

பொன்னி (பொங்கல் மலர்)

[ஆசிரியர்: முருகு சுப்பிரமணியம்; கிடைக்குமிடம் செந்தமிழ்ப் பதிப்பகம் புதுக்கோட்டை; விலை ரூ. 3-12-0]

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் கருத்தோவியமாகிய சேர தாண்டவம் என்னும் அரிய நூல் [illegible] பொன்னுல காட்சி பொன்ற [illegible] அலங்கரிக்க, திராவிட எழுத்தாளர்களின் எழுத்தோவியங்கள் படிப்போர் உள்ளத்தைக் கவர, எழில் நடை ஓவியங்கள் பல எங்கும் அழகு படுத்த கல்ல ஆர்ட்காகிதத்தில், 110 பக்கங்களில் பதிப்பிடப்பட்டுள்ள ‘பொன்னி’ பொங்கல் மலர் வரப்பெற்றோம். பத்திரிகை உலகில் அதுதற ஆண்டு மடல்கள் வெளியிடும் ஆற்றல் ஒரு தனிப்பட்ட கூட்டத்தாருக்கே உண்டு என்னும் தவறான கருத்தை களைந்து. திராவிட எவரும் அத்துறையில் ஈடுபடும் திறன் வாய்ந்தவரல்லர் என்பதை விளக்கிக் காட்டும் வண்ணம் ‘பொன்னி’ பொலிவுடன் வெளிவந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

கதைகள், கட்டுரைகள் அனைத்தும் ஆர்ட் காகிதத்திலேயே பிரசுரிக்கப்பட்டிருப்பது அழகாகவே இருப்பினும், அது காரணமாக மலரின் விலை அதிகமாக்கப்பட்டிருப்பதை நோக்கும்போது ஆர்ட் காகிதம் அவசியமில்லை என்றே சொல்ல வேண்டும். மற்ற துறைகளில் ‘பொன்னி’ பொங்கல் மலர் சிறப்புற விளங்குகிறது.

* * *

முத்து (பொங்கல் மலர்)

[ஆசிரியர்: நாரா. நாச்சியப்பன் கிடைக்குமிடம்: செந்தமிழ் பதிப்பகம் புதுக்கோட்டை விலை அணா 8]

‘முத்து’ என்னும் சிறுவர் வார இதழின் பொங்கல் மலர் வரப்பெற்றோம். இதில் தோழர்கள் அண்ணாத்துரை, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உள்ளிட்ட பல அறிஞர்களின் கருத்தோவியங்கள் சிறுவர் படித்து மகிழும் வண்ணம் இனிய எளிய முறையில் வெளிவந்துள்ளது. குறிப்பிடத்தக்க கதைகள். கட்டுரைகள் விளக்கப்படங்கள் முதலியன சிறுவர்களின் அறிவுச் சுடர் [illegible] அமைந்துள்ளது மலர், முத்தாகவே விளங்குகிறது. சிறுவர் யாவரும் படிக்க வேண்டியதே.

* * *

வரப்பெற்றோம்

காமாட்சி (மாத மிருமுறை)

[ஆசிரியர்: என். ஆர். கணபதி, விலை அணா 2. கிடைக்குமிடம் 108, தங்கசாலைத்தெரு சௌகார்பேட்டை, சென்னை]

* * *

“வழி காட்டி”

(மாத மிருமுறை)

[ஆசிரியர்: இ. மாணிக்கம். விலை அணா 1½ கிடைக்குமிடம்: வழி காட்டி நூலகம், கோட்டைஸ்டேஷன் ரோடு, தெப்பக்குளம் P. O. திருச்சி]

காமன்வெல்த் மாநாடு பற்றி கிருஷ்ணமேனன்

லண்டன், ஜன. 20—

காஷ்மீர் பிரச்னை, தென்னாப்பிரிக்க பிரச்னை ஏன் காமன்வெல்த் மாநாட்டில் விவாதிக்கப்படவில்லை என்ற நிருபர்கள் கேள்விகளுக்கு இந்திய ஹைகமிஷனர் தோழர் கிருஷ்ணமேனன் பதிலளிக்கையில், காமன்வெல்த் மாநாடு மந்திரிகள் கோர்ட்டு அல்ல என்றும் கோர்ட்டு இம்மாதிரி தகராறுகளைக் கவனிக்கும் ஆனால் அத்தகைய பொது மாநாட்டில் பேசுவது சாத்தியமில்லை என்றும் அதனால் அவை மாநாட்டின் முன்வரவில்லை என்றும் கூறினார்.

ஜப்பானிய சமாதான உடன்படிக்கை விஷயமாக விவாதிக்கப்பட்டது என்றும் அது சீக்கிரம் முடிவடையவேண்டும் என்று பொதுவாக எண்ணம் மாநாட்டில் இருந்ததென்றும் அவர் கூறினார்.

ஜப்பானிய சமாதான உடன்படிக்கை சீக்கிரம் கையெழுத்தாகவேண்டும். என்று அவர் நம்பிக்கை தெரிவித்து கூறியதாவது:—

என்னதான் இருந்தாலும், ஜப்பான் இந்த உலகத்தின் பகுதியைச் சேர்ந்தது. இதில் இந்தியா சிரத்தை எடுத்துக் கொள்வதில் தவறென்ன? ஜப்பான் போரில் ஈடுபட்டதால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் இந்தியா பாதிக்கப்படவில்லையா?

செய்திப் படத்தில் விஞ்ஞானிகள் மாநாடு

“சமீபத்தில் பூனாவில் நடைபெற்ற இந்திய விஞ்ஞான காங்கிரசில் 37 வது மகாநாட்டில் கலந்து கொண்ட மேடம் ஜோலியட் க்யூரி, ஸர் ராபர்ட் ராபின்ஸன் போன்ற பிரபல வெளிநாட்டு விஞ்ஞானிகளின் சொற்பொழிவுகளின் தேசிய ரசாயன ஆராய்ச்சி கூடத் திறப்பு விழாவின் ஒளிப்பதிவுகளும் இவ்வார இறுதியில் வெளிவரும் இந்திய செய்திப்படத்தின் சிறப்பு அம்சங்களாகும்.

டில்லாவில் நடைபெற்ற “ஸ்டேடியம்” போட்டிக் காட்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளது. உல்லாச யாத்திரிகர்களுக்கு மற்ற நாடுகளில் கிடைக்கும் எல்லா வசதிகளும் இங்கும் கிடைக்கின்றது என்பதை இக்காட்சிகள் நன்கு எடுத்துக்காட்டுவனவாக அமைந்துள்ளன. கவர்னர் ஜெனரல் ராஜாஜி [illegible] ஆகிய அபூர்வமான காட்சியும் கூச்பீஹார் சமஸ்தானம் மேற்கு வங்காளத்துடன் இணைக்கப்பட்ட குதூகலக் காட்சிகளும் இப்படத்தில் சேர்க்கப்பட்டுள்ள மற்ற அம்சங்களாகும்.

பொங்கல் விழா :: கூட்டங்கள்

மம்சாபுரம்

மம்சாபுரம், ஜன. 19—

14-1-50 தைத்திங்கள் முதல் நாள் இவ்வூர் பகுத்தறிவு மடம் பாத்தின் சார்பாக பொங்கல் விழா சிறப்புடன் நடந்தேறியது. பெருமக்களும், தோழர்களும் வந்திருந்தனர். அவ்வமயம் பொங்கலை வைத்து மக்கள் மகிழ இசைத்தட்டு வைக்கப்பட்டது. மழையில்லாவிட்டாலும் வாலிபர்கள் முயற்சி செய்து கொண்டாடினர். [illegible] நன்றாக வந்த பெருமக்கள் வாழ்த்தினர், [illegible] இன்னும் பல இடங்களில் பொங்கல் கொண்டாடவேண்டும் [illegible] தோழம் தமிழர்த் [illegible] சொன்ன. எல்லோரும் கொண்டாட உறுதி சொன்னார்கள். விழா இரவு 10 மணிக்கு இனிதே முடிவுற்றது.

சலகண்டபுரம்

சலகண்டபுரம், ஜன. 19—

16—1—50 திங்கள் மாலை 6 மணிக்கு செட்டியார் சாவடி முன்பு புலவரேறு ஆசிரியர் அ. வரதராஜனார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் பேசும்போது நம்மை ஆண்ட அரசர்கள் நீதிக்கும் இன்பத்திற்கும் உள்ள வித்தியாசத்தையும்— நாட்டு மக்களுக்கு நல்ல நீதி ஏற்பட வேண்டுமானால் சமுதாயம் திருத்தப்பட வேண்டுமென்றும்— ரேடியோ வில் நின்று பாட்டுக் கேட்கும் போது— [illegible] நமக்கு எப்படி கேட்கிறதோ அதைப்போல் [illegible] தமிழர்கள் [illegible] அறிகிறோம். இன்று ஆரியர்கள் [illegible] தமிழ் நாட்டைச் சேர்ந்தது என்பதற்கு—தொல்காப்பியத்திலிருந்து சான்றுகளை எடுத்துக் காண்பித்தும், மேல் நாடுகள் நல்ல முறையிலே இருப்பதற் காரணம் உற்சாகத்தோடு விஞ்ஞான முறையிலே சென்றதனால் தான் என்றும் எல்லோரும் [illegible] இருக்கிறார்கள்—நாமும் நம்பிக்கையோடு [illegible] உற்சாகத்தோடு வேலை செய்தால் நாம் முன்னேறுவது உறுதி என்றும் கூறினார். அடுத்து தோழர்கள் [illegible] கண்ணன், என். [illegible] நாதன், [illegible] சுந்தரசாமி ஆகியோர் பேசியபின் தலைவர் முடிவுரை கூற கூட்டம் இனிது கலைந்தது.

கல்லூரணி

கல்லூரணி திராவிடர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தமிழர் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. இதையொட்டி இரவு கழகத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. "வழிகாட்டி" ஆசிரியர் திரு. ச. அ. புன்னைமுத்து தலைமை வகித்து, 'தமிழர் திருநாள் கொண்டாடப்பட வேண்டியதைக் குறித்தும் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய வரலாற்றினையும், மற்றைய கழக ஆட்சிக்கு [illegible] கழகம் [illegible] கொண்டாட வேண்டிய அவசியத்தையும், தமிழ் ஆண்டு, திங்கள் முதலியன ஆரியர்களால் எப்படி மறைக்கப்பட்டு ஆரிய ஆண்டு, திங்களே தமிழ் ஆண்டு திங்களாக [illegible] கொண்டு வருகிற வெட்கக்கேட்டையும், விளக்கிப் பேசினர்.

பின்பு தோழர்கள் உல. வே. பழனிச்சாமி, கல்லூரிமாணவர் தோழர் க. அ. பு. அரசதுரை, எம். வி. செல்வம் ஆகியோர் பேசினர். தோழர் கே. டி. வி. அரசர் சாமி சீர்திருத்தப் பண்பாடின தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் வா. ச. நடராசன் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

தூத்துக்குடி

தூத்துக்குடி, ஜன. 19—

தூத்துக்குடி வடக்கூர் தி. மு. கழகத்தில் (14—1—50) தை திங்கள் முதல் நாள் பொங்கல் விழா சிறந்த முறையில் கொண்டாடப் பெற்றது.

காலை 7 மணி முதல் ஒலிப் பெருக்கியின் உதவியால் பகுத்தறிவு இசைத் தட்டுகளும், பகுத்தறிவு பாடல்களும் பாடப்பட்டன. 'பொங்கல் விழா—திராவிடர் தம் தனிப் பெரும் திருநாள்' என்பதை விளக்கி தோழர் இராக. தங்கப் பழம் தோழர் எஸ். எஸ். சிவசாமி முதலியோர் விரிவுரை நிகழ்த்தினார்கள்.

மாலை 4 மணிக்கு தோழர் எஸ். ஒ. வெற்றிவேல் தலைமையில் பகுத்தறிவு பாடல் போட்டி 'பக்க வாத்தியங்களுடன் மிக்க விமரிசையாக நடைபெற்றது. போட்டியில் எழுபேர்கள் கலந்து பகுத்தறிவு பண்பாடி ஜனத்திரளை இன்னிசையால் மகிழ்வித்தார்கள்.

முதல் பரிசு தோழர் ஏ. மாடசாமிக்கு ரூ. 15 விலையுள்ள கடிகாரமும், 2-வது பரிசு தோழர் ம. எம். குட்டியப்பாவுக்கு ரூ. 10 பெறுமான சாப்பாட்டுப் பாத்திரமும், 3-வது பரிசு ரூ 6 விலையுள்ள பெட்டி (Trunk) என்று வழங்கப் பெற்றது. பகுத்தறிவு பாடல் போட்டிக்கு நிதி உதவி, உற்சாக மூட்டியும் வந்த தோழர் எஸ். ஒ. வெற்றிவேல் அவர்களைப் பாராட்டி தோழர் [illegible] நன்றி கூற கூட்டம் இரவு 8 30 மணிக்கு இனிது முடிவெய்தது.

கோவை

கோவை, ஜனவரி. 16—

14—1—50 மாலை 6 மணிக்கு தமிழர் இளைஞர் சங்கத்தின் ஆதரவில் கோவை ம. ர. க. செல்வன்னிக் கருகிலுள்ள மைதானத்தில் பொங்கல்விழா ஆரம்பமாயிற்று. அதுபோது தோழர் ஈ. ச. மணியம் முன் மொழிய தோழர் கோவிந்தன் வழிமொழிய தோழர் கே. பி. எஸ். அருணாசலம் (ஆசிரியர் மாதமணி) தலைமை வகித்தார்.

தோழர்கள் இரா. கிருஷ்ணசாமி, சி. சுப்பிரமணியம் ஆகியோர் விரிவாக சொற்பொழிவாற்றினார்கள். மற்றும் தோழர்கள் ர. செல்வன் புலவர் இராமச்சந்திரன் ஆகியோர்களும் தத்தம் கருத்துக்களைச் சிறந்த முறையில் எடுத்துரைத்தனர். பின்பு தலைவர் முன்னுரைக்குப்பின் கூட்டம் இனிது முடிந்தது.

சூலூர்

சூலூர், ஜன. 19—

பொங்கல் விழா சொற்போட்டி பரிசுக் கூட்டம் சொற்பயிற்சிக் கழகக் கட்டிடத்தில் 15 1 50-ல் உள்ளூர் உயர்தர பாடசாலைத் தமிழ்ப்புலவர் இலசாம்பு அவர்கள் தலைமையிலும் ஆசிரியர் எஸ். எ. இராமசாமி அவர்களும் தீர்ப்பாளர்களாகவும் அமர்ந்து பொங்கல் விழாப் போட்டிப் பேச்சு நடந்தது. பேச்சில் தேர்ந்தவர் என்று இ. வேலுச்சாமிக்கு 'திருக்குறள்' குழந்தையரை பரிசு அளிக்கப்பட்டது.

தலைவர் அவர்கள் பேச்சில் ஒழுங்கு முறைப்பற்றியும் பேசினார்.

அடுத்து ஆசிரியர் எஸ். எ. இராமசாமி அவர்கள் சொற்பயிற்சிக் கழகத்[illegible] தேவைபற்றியும், சொல்வேறு உழவர்களால்தான் நாடு இருந்து முடியும் என்பதைப் பற்றியும் பலவாறுகளுடன் கூறியபின் செயலாளர் எஸ். எ. அருணாசலம் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

நத்தாரந்துபட்டி

நத்தாரந்துபட்டி, ஜன. 19—

நேதாஜி மைதானத்தில் தோழர் பெரி. சுவ. பெரிய கருப்பன் தலைமையில் 16—1—50 மாலை 5 மணிக்குத் தமிழர் திருநாள் கொண்டாடப்பட்டது. அதுபோழ்து தோழர்கள் டி. கே. சீனிவாசன், கோவை இளஞ்சேரன் புலவர் குழந்தையம்மாள் முதலியோர் தமிழர் சிறப்புப் பற்றியும், இனி ஆற்ற வேண்டிய கடமை பற்றியும் விரிவான சொற்பொழிவாற்றினர். இரவு 9 மணிக்கு கூட்டம் இனிதே முடிவுற்றது.

சென்னை

சென்னை, ஜன. 20—

பழனிச்சாமி நிலைவுப் படிப்பகத்தின் சார்பாக 14—1—50 காலை 8 மணிக்கு மேல் தோழர் என். சங்கரன் தலைமையில், தைப்பொங்கல் தமிழர் திருவிழாவை முன்னிட்டு, தமிழ் கொடியுடன், இருசிறுவர்களின் சிலம்பு [illegible] வரிசையுடன் பல முக்கிய வீதிகளின் வழியாக ஊர்வலம் வந்தனர். இடையில் தோழர்கள் என். எ. இராசகோபால், கே. தேவேசன், எ. பி. டி. மூர்த்தி இவர்களால் மாலை மரியாதையும் சிறுவிருந்துகளும் அளிக்கப்பட்டன. ஊர்வலம் முடிந்தவுடன் எளியோர்களுக்கு கஞ்சி ஊற்றப்பட்டது. மாலை 6-30 மணிக்கு தோழர் எ. பி. டி. மூர்த்தி தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது தோழர் சா. தி. ஆ. ஜீவானந்தம் அவர்கள் பொங்கல் விழாவை நாமெல்லாம் திராவிடர்கள் கொண்டாடவேண்டிய நோக்கத்தையும், அதே நேரத்தில் பல அர்த்தமற்ற ஆரசமான தீபாவளிப் பண்டிகை போன்ற பண்டிகைகளை வெறுக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்திக் கூறினர். சீர்திருத்தக் கருத்து அமைந்த பாடல்களைப் பாடி சீர்திருத்த பணிசெய்யும் இரு சிறுவர்களான தோழர்கள் என். மதுரை, எம். தம்பிதுரை இவர்களுக்குத் தோழர் சா. தி. ஆ. ஜீவானந்தம் அவர்களால் இரு வெள்ளி பதக்கங்கள் பரிசு வழங்கப்பட்டது. ஏழைகளின்பக்கம் அனுதாபம் உண்டு என்ற முறையிலே இருவருக்கும் ஆடைகள் வழங்கப்பட்டது. பிறகு தோழர்கள் எம். சங்கரன், ஆர். எ. [illegible] இவர்கள் பேசியபின் தலைவர் முடிவுரைக்குப் பிறகு தோழர் எம். பாலசுந்தரம் நன்றிக்கூற இன்னிசையுடன் விழா இனிது முடிந்தது. அதன்பிறகு சிறுவர்களுக்குச் சிற்றுண்டியும், கற்பூரம் வழங்கப்பட்டது.

கோவை மாவட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு

28—1—50 சனிக்கிழமை மாலை 6-மணிக்கு கணியூரில் மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெறும். அதுசமயம் கீழ்க்கண்ட விஷயங்களைப் பற்றி யோசித்து முடிவு செய்யப்பட வேண்டியிருக்கிறது. மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் தவறாமல் வருகை தந்து கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. மாவட்ட மாநாட்டுத் தீர்மானங்கள்

2. மாவட்டத்தின் இன்னும் கிளைகள் அமைத்தல்.

3. இதர விஷயங்கள்.

(குறிப்பு) மாவட்ட செயற்குழு உறுப்பினர்களுக்கு தனித்தனியே தபால் மூலம் அழைப்பு செய்தி செய்யப்பட்டிருக்கிறது.

ப. பழனிச்சாமி
செயலாளர்

எண்ணெயெடுக்கும் இயந்திரம்



அண்மையில் ஐ. நா. தலைமை நிலைய வட்டாரத்தில் நடைபெற்ற ஐ. நா. விஞ்ஞான மாநாட்டில் 600-க்கு மேற்பட்ட விஞ்ஞானிகள், எஞ்சினியர்கள், பொருளாதார வல்லுநர்கள், அரசியல் துறை நிர்வாகிகள் கலந்துகொண்டனர். உலக நாடுகள் ஐம்பதிலிருந்து இப்பிரதிநிதிகள் வந்திருந்தனர். விஞ்ஞானத்தை வளர்க்கும் துறைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளவும் மனித நன்மைக்கு உபயோகப்படுத்திக்கொள்ளவும் தலைவர் ட்ரூமன் மேற்கொண்டிருக்கும் திட்டமொன்றை யனுசரித்தே இம் மாநாடு கூட்டப்பட்டது.

பெருகி வரும் உலக மக்கள் தொகையின் வாழ்க்கைத்தர உயர்வுக்கு பூமியின் வளங்களைப் பெருத்த அளவில் பயன்படுத்திக் கொள்ளவாமென்பதே மேற்படி மாநாட்டின் நோக்கம். மாநாடு முடிந்ததும் பிரதிநிதிகள் பலரும் யு. எஸ்-வின் பற்பல பகுதிகளிலும் சுற்றுப்பிரயாணம் நிகழ்த்தி, அந்நாட்டு சர்க்காரின் தொழிலியல் திட்டங்களைப் பார்வையிட்டனர். ஆழ்கடல் தரைமட்டத்துக்கடியிலிருந்து எண்ணெய் எடுக்கு முறை இப்போது யு. எஸ். நாட்டில் சிலபல ஆண்டுகளாக நவீனமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அத்துறையில் பயன்படுத்தப் பெறும் இயந்திரக்கருவியே மேலே காட்டப்பட்டிருப்பது.

6500 ஏக்கர் நன்செய் புன்செய் ஆகும் காட்சி!

இராஜா வாய்க்கால் வறண்டதின் விளைவு

எம். எல். ஏ.க்கள் என்ன செய்கிறார்கள்?

பொத்தனூர்-வேலூர்-சேலம் ஜன 18

6500 ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் அளிக்கும் இராஜா வாய்க்காலின் தலைப்பாகமான ஜேடர்பாளையத்தில் சென்ற ஆண்டு 6500 லட்சம் ரூபாய் செலவில் ஒரு "பெட்ரெகுலேட்டர்" கட்டப்பட்டது. இந்த அணைப்பு ஐந்து [illegible] ஒருவே காவிரி நீரை வாய்க்காலுக்குள் விட்டு [illegible]. இதனால் 10,000 கன அடி நீர் வாய்க்காலுக்குள் விழுகிறது. 250 கன அடி நீரைத் தான் இவ்வாய்க்கால் கொள்ளும். அதிகப்படியான நீரைப் போக்க சரியான "வெளிப்போக்கு" இல்லை. இப்பிரகுலேட்டரிலிருந்து ஒரு மைலுக்கப்பால் வாய்க்காலின் கரையில் ஆழமான உடைப்பெடுத்து நீர் காவிரிக்குள்ளேயே சென்றுவிடுகிறது. வாய்க்காலுக்குள் நீர் சிறிதளவுகூட வருவதில்லை.

ஒருமாதகாலமாக வாய்க்காலில் நீர் வாராததால் இந்தப் பகுதியில் சாகுபடியாகும் வெற்றிலை, நெல், கரும்பு, வாழை முதலிய விளைச்சல் கருகிப் போகிறது. வெற்றிலைத் தோட்டங்களில் இரவு பகலெனப் பாராமல் ஆயிரக்கணக்கானவர் பட்டாளிகள் இறைத்து வெட்டி நீர் பாய்ச்சுகின்றனர். இப்பொழுது நிலத்தில்கூட நீர் சுரப்பில்லை. இந்தப் பகுதியில் ஒரு ஏக்கர் நிலத்தின் விலை ரூ 15 000 ஆனவர்களும், வாய்க்காலைப்பற்றி மிகவும் கவலைப்படுகின்றனர். இதுபற்றி ஒரு முடிவுக்கான விவசாயிகளும், தொழிலாளிகளும் மாலை 6-மணிக்கு இவ்வூர் குடிப் பி தமிழ்ச்சங்கத்தில் கூடினர்.

கூட்டத்திற்குநன்செய் இடையாறு தோழர் கந்தசாமிக்கவுண்டர் அறிவகங்களின் தலைவர் தோழர் மு. [illegible] தலைமை வகித்தார். தோழர்கள் பி. வி. குப்பபாண்டி, கே. ஆர். முத்துசாமி, குச்சிப்பாளையம் சண்முகம், பொத்தனூர் வி. மருதன் செ. அ. மணிவாசகம் ஆகியோர் பேசினர். தோழர் கே. ஆர். முத்துசாமி பேசுகையில் "சேலம் ஜில்லா கலெக்டர் உடைப்பை நேரில் பார்த்துவிட்டு சீக்கிரமே இதைக் குறித்து ஏற்பாடு செய்து கொள்ளுகிறேன் என்று கூறிவிட்டார்" என்று கூறிவிட்டார். தோழர்கள் வி. மருதன், செ. அ. மணிவாசகம் பேசுகையில், நம் தொகுதியில் ஓட்டுப் பெற்றுச் சென்ற சட்டசபை அங்கத்தினர்களான நாமக்கல் நாகராஜ அய்யங்கார், மோகனூர் எம். பி. பெரியசாமி ஆகியோரும் உயிர் பிரச்னையான இவ் வாய்க்காலைப் பற்றி ஒன்றும் முயற்சி எடுத்துக் கொள்ளாததால், இவர்கள் ராஜினாமா செய்துவிட வேண்டுமென்று இக்கூட்டம் ஒரு தீர்மானம் செய்யக் கேட்டுக்கொண்டது. தோழர் பி. வி. குப்பபாண்டி அவர்கள் பேசுகையில் இடைக்கால ஏற்பாடு செய்து கொண்டதற்குமேல் நல்ல முறையில் சர்க்கார் பெட்ரெகுலேட்டர் அமைத்துத் தராவிட்டால், விவசாயிகள் சத்தியாக்கிரகம் செய்யப் போவதாகவும் குறிப்பிட்டனர்.

ஊருக்கு 500 பேர்களாக நட்டு, மண்வெட்டியுடன் ஜேடர்பாளையத்திற்குச் சென்று திருத்தவேண்டுமென்றும், ஏக்கருக்கு ரூ. 1-8-0 தரவேண்டுமென்றும் முடிவு செய்தனர். (க-8)

ஏகாதிபத்திய-முதலாளி ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பின் மூலம் பொதுமக்களுக்குத் தெரிவித்துக்கொள்வது என்பதை மாநாட்டுப் பிரதிநிதிகளாகிய நீங்கள் அனைவரும் கூடி ஒருமுடிவுக்கு வரவேண்டும். அந்த முடிவு உள்ளபடியே வரலாற்று சிறப்பு வாய்ந்ததாக இருக்கும் என்ற எண்ணத்தில்தான், இந்த மாநாடு முக்கியமான—நெருக்கடியான சூழ்நிலையில் கூடுகிறது என்று குறிப்பிடுகிறேன். வடநாட்டைத் தலைமையாகக்கொண்டு அமையப்போகும் 'குடியரசு', வடநாட்டு—ஏகாதிபத்திய—முதலாளித்துவ—சுரண்டல்— பாசிச ஆட்சியாகத்தான் இருக்குமே ஒழிய, நமக்கு நன்மைபுரியும் அரசாக ஒருபோதும் இருக்கப்போவதில்லை என்பது மட்டும் உறுதி.

அடக்குமுறைப் பசி!

மேற் கூறப்பட்ட அனைத்துலக-அனைத்திந்திய அரசியல் சூழ்நிலைகள். திராவிடத்திற்குத் தீரா நோய்களாக அமைந்திருப்பதோடல்லாமல், வேறு பலத் தொத்து நோய்களும் இருக்கின்றன.

எதிர், கட்சி எதனையும் மதியாது-இல்லை, இல்லை. எதிர்க்கட்சி எல்லாவற்றையும் அடியோடு ஒழித்துவிட்டு, ஏகக்கட்சி அரசாங்கத்தை என்றென்றும் நடத்திச் செல்ல வேண்டும் என்ற நப்பாசையால் பீடிக்கப்பட்டுள்ள காங்கிரஸ் மாகாண ஆட்சிப்பீடத்தில் அமர்ந்துகொண்டு, நம்மீது அடக்குமுறை அம்புகளை ஒன்றன் பின் ஒன்றாக வீசிக் கொண்டிருக்கிறது. எவ்வெவ் வகைகளிலெல்லாம், சில பொழுது அளவுக்கு மீறி, அத்து மீறி கூட அடக்குமுறை அதிகாரங்களை வீச முடியுமோ, அவற்றையெல்லாம் வீசிப் பார்த்த வண்ணமாகவே இருக்கின்றது நமது கூட்டங்களுக்குத் தடை-ஊர்வலங்களுக்கு பெரும்பாலான ஊர்களிலே தடை-சில ஊர்களிலே நமது கழகக் கொடிகளை ஏற்றுவதற்குத் தடை—பொதுக்கூட்டம் நடத்தும் இடங்களுக்குத் தடை-பத்திரிகைகளுக்குத்தடை-பத்திரிகைகளுக்கு, பத்திரிகாசிரியர்களுக்கு, பதிப்பகத்தார்க்கு, வெளியிடுவோர்க்கு; அச்சகத்தார்க்கு ஜாமீன் தொகை கட்டும்படி உத்திரவிடுவது-கழக அறிஞர்கள் வெளியிட்டுள்ள, அறிவூற்றுக்களெனவிளங்கும் நூல்களுக்குத் தடை- அறிவுப் புரட்சியை உண்டாக்கும் கழக நாடகங்களுக்குத் தடை இவ்வாறு பல வகைகளிலும் கொடுமைப்படுத்தி நம்மை நசுக்கி நாசம் செய்துவிட காங்கிரஸ் அரசியலார் முன்வந்து விட்டனர்.

திட்டம் தீட்டுக!

ஏதோ கூறும் காமராஜரிலிருந்து, என்னென்ன வெல்லாமோ உளறிக் கொட்டும் மாதவமேனனவரை பேரத்தனைப்பேரும் மைவாசைப் பாடி தீர்ப்பதுான்று இதிதைசமயில் இறங்கிவிட்டிருக்கிறார்கள் வேறு சில இடைஞ்சல்களை கள். நமது வளர்ச்சியின் வேகத்தையும், நமக்குக் கிடைக்கும் ஆதரவையும் கண்டு, பொறுமை கொண்டு, நம்மை வளரவொட்டாமல் பாதுகாத்துக்கொள்ள மறைமுகமாக என்னென்ன வழிகளைக் கண்டுபிடிக்க முடியுமோ அவைகளில் கம் கவனத்தைச் செலுத்திவருகின்றனர். தூய்மை உள்ளமும் உழைப்புத் திறனும் படைத்த நமக்கு நாட்டு மக்களின் அமோகமான ஆதரவு இருப்பதைக் கண்டு, இலிகொண்டு கொள்கையில்வழுவிய சிலர் இல்லாததையும், பொல்லாததையும், இட்டுக்கட்டியதையும், இழி சொற்களையும், பழிச்சொற்களையும் நம்மீது ஏவிவிட்டு அவற்றின் மூலம் நமது கழகச் செல்வாக்கு அழிந்துபோகிறது என்று 'ஆரூடம்' கணித்துக் கொண்டிருக்கின்றனர்; ஆனால் இவர்கள் எல்லோரும் நினைப்பதற்கு மாறாக, எடுக்கும் முயற்சிகளுக்கு எதிராகத்திராவிட முன்னேற்றக் கழகம், நாள்தோறும் வளர்ந்து வருகிறது. என்றாலும், பகைவர்களின் கூர் அம்புகள் நமது நாலாப்பக்கங்களிலும் நீட்டிக் கொண்டிருக்கின்றன என்பதையும், அவற்றை எதிர்த்துச் சமாளித்து முன்னேற வேண்டிய பெரும்பொறுப்பு நமக்கு இருக்கிறது என்பதை உணர்ந்து, அதற்கான திட்டங்கள் தீட்டி, நடைமுறையில் கொண்டுவர வேண்டும் என மாநாட்டுப் பிரதிநிதிகளாகிய உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

காத்துநிற்கிறார்கள்!

திராவிடத்தின் அரசியல்—பொருளாதாரம்—சமுதாயம் ஆகிய மூன்று துறைகளிலும் அறிவுப்புரட்சியை ஏற்படுத்தி ஆக்கந்தரும் திட்டங்களை வகுக்க நாம் பாடுபட்டு வருகிறோம். இந்த நாட்டிற்கு ஏதாவது நன்மை ஏற்படக் கூடுமானால் அது நம்மால் தான் முடியும் என்ற அளவுக்கு நம்மிடத்திலே பற்றும், நமது கொள்கையினிடத்து உறுதியும் வைக்கத் தலைப்பட்டு விட்டார்கள். மக்கள் முன் நிறுத்தப்பட்டிருக்கும் பயங்கரப் பிரச்சினைகள் தீருவதற்கான வழி வகைகளை நம்மிடத்திலிருந்து எதிர்பார்க்கிறார்கள். நிலைமையைத் தெளிவாக உணரும் ஆற்றலும், அதற்கேற்ப தீயவை ஒழியவும், நல்லவை நடைபெறவும் ஆன திட்டங்களைத் தீட்டிக்காட்டும் திறனும் நம்மிடத்திலே இருக்கிற காரணத்தால்தான் வான்முகிலை எதிர்பார்த்திருக்கும் பைங்கூழ்போல, நம்மை விளக்கங்கேட்டும், வழிகேட்டும் ஆக்கம் தேடிக்கொள்ள விரும்புகிறார்கள்.

நம்மிடத்திலே போதுமான வசதிகள் இல்லை; என்றாலும் கழகம் உவகைகொள்ளும் அளவுக்கு வளர்ந்தோங்கி வருகிறது பண பலம் இல்லை; தொண்டர்படை பலம் இல்லை; பத்திரிகை பலம் இல்லை; பாரான்வேலரின் கூட்டுறவு பலம் இல்லை; படித்தவர்கள் பெரும்பாலோரின்ஒத்துழைப்புப் பலம் இல்லை; பிரசார பலம் இல்லை; இவ்வளவு வலிவு குன்றிய நிலையில் தான் நம் செயலாற்றிவருகிறோம். இந்த வசதிகளெல்லாம் போதுமான அளவுக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஏற்பட்டுவிட்டால், திராவிட நாட்டைத் திராவிடருக்காக்குவது மிகமிக எளிதான செயலாகமுடிந்துவிடும். கழகத்தை வலிவுள்ள சக்தியாக ஆக்கும் முயற்சியிலேதான் நாம் இப்பொழுது ஈடுபட்டிருக்கிறோம். அந்த முயற்சியின் ஒரு கூறுபாடுதான் இந்த மாநாடுங்கூட.

வடவராதிக்கம் வலுக்கிறது

திராவிடம் ஒவ்வொரு துறையிலும் நாள்தோறும் தேய்ந்துகொண்டு வருகிறது; இல்லை, திராவிடத்தைத் தேய்த்துக்கொண்டு வருகிறார்கள் வடநாட்டவர்கள். வடநாட்டான் பொருளாதாரப் படையெடுப்பும், அதிகாரப் படையெடுப்பும், அதிகாரப் படையெடுப்பும், மொழிப் படையெடுப்பும், கலாசாரப் படையெடுப்பும் திராவிடத்தில் வேரூன்றி நிலைத்து நின்று தழைத்துவளரும் அளவுக்கு ஏற்பட்டுவிட்டன. அந்த நச்சு மரங்களுக்கு அறியாமையின் காரணமாக, நீரூற்றி வளர்க்கும் சேவகத் தன்மையைத் திராவிட நாட்டவர் இன்னமும்கொண்டிருக்கிறார்கள். மக்களுக்கு அறிவுத் தெளிவை உண்டாக்கி, அவர்களின் அறியாச் செயலினின்றும் அவர்களைத் தடுத்து, அந்த நச்சு மரங்களை வேரோடும் வேரடி மண்ணோடும் பெயர்த்தெடுத்து, அவற்றிற்கு வெந்நீர் விட்டு வேகவைத்து, மாண்டுமடியச் செய்யவேண்டிய பொறுப்பு திராவிட நாட்டிற் பிறந்த ஒவ்வொருவருடையவுமான நீங்காக் கடமையாகும். இந்த அறிவு கொளுத்தும் பணியை மேற்கொள்ள மாணவமணிகளும், இளைஞர்களும், அனுபவம் வாய்ந்த முதியவர்களும் நம்மிடையே பெருகிவருகிறார்கள் என்றாலும். அந்த எண்ணிக்கையின் அளவு போதாது. பன்மடங்கு வளரவேண்டும்—வளர்க்கவேண்டும்.

வறுமை தீர வழிகோலுங்கள்

சமுதாயத்தைச் செல்லென அரித்துவரும் பிரச்சினைகளான பசிக்கொடுமை பட்டினிச்சாவு, வறுமை, பஞ்சம் வேலையில்லாத் திண்டாட்டம், தொழிலாளர் துயரம் கைத்தறியாளரின் கஷ்டம். சம்பளக் குறைவு, பஞ்சப்படி இன்மை, ஆசிரியர்கள் அவதி படிப்பு வசதியின்மை ஆகிய இன்னோரன்னவைப் பற்றித் தீர ஆராய்ந்து, அவை தீருவதற்கான வழிவகைகளைக் கண்டுபிடிக்க, திராவிட முன்னேற்றக் கழகத்தினராகிய நாம் முனையவேண்டும். இப்பொழுது இருக்கும் சூழ்நிலையில் அந்தத் தொண்டை நாம் தான் ஏற்று நடத்தவேண்டும்; நம்மால்தான் நடத்தவும் முடியும். ஆளும் கட்சிக்கு எதிராக வலிவுள்ளதாக விளங்குவது நம் கழகம் ஒன்றுகவே இருக்கும் காரணத்தால். இப்பிரச்சினைகள் சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், எந்த வகையில் பாதகம் செய்துவருகின்றன, அவற்றை நீக்குவதற்கு என்ன என்ன வழிகளைக் கையாளவேண்டும் என்பதை மாவட்டப் பிரதிநிதிகளாக உள்ள நீங்கள் தீர ஆலோசித்து முடிவுக்கு வரவேண்டுகிறோம்

நம்மை எதிர்நோக்கி இப்படிப்பட்ட பிரச்சினைகளும், நிலைமைகளும் இருக்கின்ற காரணத்தால்தான், நாம் அனைவரும் மாநாடாகக் கூடியிருக்கிறோம்.

இந்த நெருக்கடியான நிலைமையில் கூடும் இந்த மாநாட்டிற்குத் தக்க அறிவும், ஆற்றலும் படைத்த தலைவர் ஒருவர் தேவைப்படுகிறார் என்பதை நீடு நினைந்து வரவேற்புக் குழுவினர்,சேலம் தோழர் ஏ. சித்தையன் அவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் தோழர் ஏ. சித்தையன் அவர்கள், எனது பழைய நண்பர், மாநாட்டிற்குத் தலைமை தாங்க எல்லாவிதத் தகுதிகளையும், ஒருங்கே பெற்றிருக்கும் இலட்சிய வீரர் ஆவார் அறிவியக்கம் தோன்றிய காலத்திலிருந்து உழைத்து உழைத்து இன்னமும் சலிப்புக்கொள்ளாமல் தொண்டாற்றிவரும்தீரராவார் அறிவியக்கத்தின் எதிரிகளாக இருந்த வைதிகர்கள், பணக்காரர்கள், அதிகார வர்க்கத்தினர் ஆகியோரின் தாக்குதல்கள் எந்தச் இயக்கத்திலும் தம் உயிரைக்கூடப் போக்கிவிடக்கூடும் என்ற பயங்கர நிலைமை நாட்டில் நிலவியிருந்த காலத்தில், முன்னணியில் வீரராக இருந்து செயலாற்றி வெற்றி கொண்டவராவார். அவர் தொண்டாற்றும்போது பல விதத் தாக்குதல்களுக்கும். இன்னல்களுக்கும் இரையாகித் தியாகத் தழும்புகளை ஏற்றுக்கொண்டவர். தாக்குதல்கள் பல சமயங்களிலே தடையடிகளாக அவர் முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்ட போது, மனங்கலங்காமல் அவற்றைச் சமாளித்து, வெற்றியுடன் வெளியேறியுள்ளார். தொண்டு புரிவதையே தன் நோக்கமாகக்கொண்டு அதிலே ஒருவித கிளர்ச்சியும் உணர்ச்சியும் கொண்டு, இது நாள் வரையில் இயக்கத் தொண்டாற்றி வந்துள்ளார். அவர் சபலத்திற்குக் கொஞ்சம் இடங்கொடுக்க முயன்று, கொள்கையைச் சிறிதுவிட்டுக் கொடுக்க முன் வந்திருந்தால், அவர் உழைப்பெல்லாம் பணமாக மாறியிருக்கும் இது நாளில், அவர் ஒரு சீமானாகக் கூட விளங்கியிருப்பார். கொள்கைமீது அவர்கொண்ட பற்றின் காரணமாக, இழி செயல்கள் மூலம் பொருள் பெறுவதை—எதிரிகள் கோடியிட்டு அழைத்தாலும் தொடேன் என்ற முறையில் வெறுத்தொதுக்கி வந்துள்ளார். இப்பக்கத்தில் நீண்ட நாட்கள் தொடர்பு கொண்டிருந்து, அதன் வரலாற்றை நன்கு அறிந்த, அனுபவம் வாய்ந்த, சொல்லாற்றலுடைய, பணியாற்றும் பண்பு படைத்தத் தோழர் ஏ. சித்தையன் அவர்கள் இம்மாநாட்டிற்குத் தலைமைதாங்க இசைந்தமைக்காக நன்றியைத் தெரிவித்து, "வருக, வருக, வகை பல கூறுவீர்" எனக் கூறி வரவேற்கிறேன்.

மாநாட்டைத் துவக்கிவைப்பதற்கு அழைக்கப்பட்டிருக்கும் மதுரைத் தோழர் எஸ். முத்து. அவர்கள் உழைப்பையே உருவாகக்கொண்டு நடமாடிவரும் சிறிஞ்செம்மலாவார். 'உருவுகண்டு மருளற்க' என்றபடி அவர் உருவம் ஏதோ சாதாரணமாகக் காணப்பட்டாலும், அவர் உள்ளம் வைரம்பாய்ந்த வலிவுள்ள நெஞ்சாகும். எதிர்ப்பு எப்படி முளைத்தாலும் கத்தி வெட்டாகவும் ஈட்டிக் குத்தாகவும் இருக்கும் மதுரையில், தன்னந்தனியாக நின்று இயக்கப்பணி ஆற்ற நேரிடும்போதெல்லாம் இன்னல்களுக்கு ஆளாகியுள்ளார். இயக்கப் பணியினைப் பல ஆண்டுகளாக ஆற்றிவருவதற்கு அவர் பெற்ற பரிசுகள் உடல் முழுவதும் வெட்டுக் காயங்கள்தாம் அத்தியாகத் தழும்புகள் தாம், அவரைத் திராவிடப் பாசறையில், முன்னணிப்படையின் முதல் படைத் தலைவராக இருந்து பணியாற்றும் அளவுக்குக், கொண்டுவந்து சேர்த்திருக்கின்றன. பட்டம் பதவிகளுக்காக காத்திருந்துப் பல்லிளித்துக்காட்டும் பண்பு அவரிடம் எப்பொழுதும் இருந்தது கிடையாது. இனியும் இருக்கப்போவதில்லை. மானமே உயிரெனக் கொண்டு வாழும் மறத்தமிழன்—வீரத் திராவிடன் ஆவார் மதுரை மாவட்டத்தில் பல கிளைகள் செழுமையாகத் தோன்றி வளர்ந்து வருவதற்குத் தோழர் முத்துவின் சலியா உழைப்பே முக்கிய காரணமாகும். அத்தகைய வைரம் உள்ளம் படைத்தத் தொழிலாளத் தோழர் நமது மாநாட்டைத் துவக்கிவைக்க இசைந்திருப்பது நாம் பெருமை கொள்வதற்குரிய தொன்றாகும். அவரையும் "வருகவருக வழி வகுப்பீர்" எனக் கூறி வரவேற்கிறோம்.

நாமனைவரும் அறிவுத் தெளிவு பெற்று, நாட்டின் நிலைமை யுணர்ந்து, செய்கடமை அறிந்து, சிந்திக்கும் பண்புகொண்டு இங்கு கூடியிருப்பதற்கு முக்கியக் காரணமாக இருந்து—கலங்கரை விளக்கமாக விளங்கி— வழிகாட்டியாக நின்று—ஜனநாயகமணம் கமழச் செய்து; ஆக்கவேலை நடைபெற இடமளித்து-நல்லவை நடைபெற ஒத்துழைப்புத் தந்து நம்மை ஊக்குவித்து வரும் பொதுச் செயலாளரும், அறிஞருமான தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்களையும் "வருக வருக. வந்து உவகை ஊட்டுக" எனக் கூறி வரவேற்கிறேன்.

அழைப்பினை ஏற்றுக் கடமையாற்றுவதிலே களிப்பு கண்டு சியங்கள் எனத் திரண்டிருக்கும் சொற்பொழிவாளர்கள் அனைவரையும் "வருக வருக வந்து ஊக்கம் தருக" எனக் கூறி வரவேற்கிறேன்.

மாநாட்டின் பிரதிநிதிகளை வரவேற்புக் குழுவின் சார்பாக மீண்டும் ஒருமுறை வரவேற்கிறேன். இங்கு கூடியிருக்கும் அனைவரையும் அஞ்சாநெஞ்சன் அழகர்சாமி பிறந்த மண்ணிலே நின்று வரவேற்கிறேன். மாநாடு வெற்றிகரமாக நடைபெற உங்கள் அனைவர் ஒத்துழைப்பையும் ஒரு மனதாக வேண்டுகிறேன்.

வாழ்க வளமார் எமது திராவிடம்.

"திராவிட நாடு திராவிடருக்கே"

லாஸாவுக்கு மின்சார வசதி

கல்கத்தா, ஜன. 20—

லாஸாவுக்கு மின்சாரவசதி ஏற்படுத்த ரூ. 600 00000 திட்ட காண்டிராக்டை திபேத் சர்க்கார் அங்கீகரித்து விட்டனர். கல்கத்தா ஜெனரல் எலெக்ட்ரிக் கம்பெனியுடன் இந்த காண்டிராக்ட் செய்யப்பட்டிருக்கிறது,

தி. மு. க. பொதுக் கூட்டங்கள்

24—1—50

நுவத்திபுரம் :— சி. என். அண்ணாத்துரை காஞ்சி. கல்யாணசுந்தரம்

25—1—50

இராமநாதபுரம் (முகவை) :— என். வி. நடராசன், டி. கே சீனிவாசன்.

திருவத்திபுரம் :— ச. சோமசுந்தர பாரதியார். க அன்பழகன்.

சென்னை மாவட்ட..

[1-ம் பக்கம் தொடர்ச்சி]

அணிவகுப்பிடையே தலைவர்கள் மாநாட்டுப் பந்தலை அடைந்தனர்.

திராவிட நாட்டுப் பண் பாட்டுடன் நிகழ்ச்சிகள் துவங்கின. மாநாட்டுச் செயலாளர் தோழர் கே. கோவிந்தசாமி மாநாட்டைப்பற்றி விளக்கிக் கூறியபின், வரவேற்புக்கழகத் தலைவர்தோழர் டி.எம்.பார்த்தசாரதி ½ மணி நேரம் தமது வரவேற்புரையை நிகழ்த்தினார். பிறகு மதுரைத் தோழர் எஸ். முத்து மாநாட்டைத் துவக்கிவைத்து சுமார் அரை மணி நேரம் பேசினார்.

கடைசியாக தி. மு. க பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாத்துரை நீண்ட கைதட்டலுக்கிடையே எழுந்து, தி. மு. க. வளர்ச்சி குறித்தும், இன்றைய ஆட்சியாளரின் போக்கைக் கண்டித்து, அறிவுரை கூறியும் விளக்கமாக சுமார் 2 மணி நேரம் பேசி முடித்தார்.

பிறகு முறையே "வழக்கு வாபஸ்", "கல்சுமந்த கசடர்" ஆகிய இரு ஓரங்க நாடகங்களும் கழகத் தோழர்களால் மிகச் சிறப்பாக நடிக்கப்பட்டன. இத்துடன் நேற்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

மாநாட்டிற்கு முன்னாள் அமைச்சர்களான எஸ். முத்தையா (முதலியார்), எஸ். இராமநாதன், தோழர்கள் டி. சண்முகம், டபுள்யூ கே தேவராசன், கா. அப்பாதுரை எம் ஏ எல். டி., என் ஜீவரத்திளம், டாக்டர். எஸ். தருமாம்பாள், என். வி. நடராசன் சத்தியவாணிமுத்து, மற்றும் கழகப் பேச்சாளர் அனேகரும் வந்திருந்தனர்.

இரவு 11 மணிக்கு மாநாட்டுத் தீர்மான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

மாநாடு மீண்டும் இன்று காலை 9 மணிக்கு தோழர் ஏ. சித்தையன் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகியுள்ளது. நேற்றைவிட இன்று மக்கட் தொகை மிக அதிகமாகக் குழுமியுள்ளது. மாநாடு தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. (ந, நி.)

[முழு விபரம் நாளை வரும்]

கோல்ட் கோஸ்டுக்குத் தந்திகள்

சென்னை, ஜன. 20—

மேற்கு ஆப்ரிக்காவில் கோல்ட் கோஸ்டிலுள்ள இடங்களுக்குத் தந்திகள் அனுப்புவதில் தாமதம் ஏற்படக்கூடுமென்று தபால் இலாகா தெரிவிக்கிறது. [illegible] செய்திப் போக்குவரத்து நிலையம் அறிவிக்கிறது.

திருச்சி தி. பா. மு. கழகத் துவக்க விழா

திருச்சி, ஜன. 12—

திருச்சி திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத் துவக்க விழா 8—1—50 ஞாயிறு காலை 9 மணிக்கு நடைபெற்றது. 5000 பேர் கூடியிருந்தனர். அதில் தோழர் கே. ஏ. மதியழகன் பி. ஏ. தலைமை வகித்தார். தன் தலைமையுரையில் மாணவர் கழகத்திற்குச் செய்யும் பணிகுறித்தும், அரசியலாரின் பொருளாதாரத்திட்டத்தைப் பற்றியும் விரிவாக தலைமையுரை நிகழ்த்தினார். தோழர் இல்லைவிக்னேசன் மாணவர்கள் தாய்க் கழகத்திற்கு அடங்கிடையான தொண்டாகிய கிராமப் பிரசாரத்தை விடுமுறை காலங்களில் கிராமக்களிடையே வெகு எளிய முறையில் பிரசாரம் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுப் பேசினார். அடுத்து தோழர் டி. கே. சீனிவாசன் அண்ணாவின் அறிவுரைப்படி மாணவர்கள் நன்றாகப் படிக்க வேண்டும் என்றும் மற்றும் கலைஆசிரியப் பிரச்சினைகள் பற்றியும்பேசினார். பின்னர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள் சிறிதுநேரம் பேசினார். அடுத்து நீண்ட கைத்தட்டலுக்கிடையே அண்ணாத்துரை அவர்கள் மூத்த இந்தியர் வரலாறுபற்றியும், திராவிட மாணவர்கள் கல்வியில் அதிக ஊக்கமாக இருக்கவேண்டும் என்றும் புதிய வரலாறுகளைப் படைத்து புத்தம் புதிய கருத்துக்கள் கொண்ட கட்டுரைகள் மாணவர்கள் எழுத வேண்டும் என்றும், அவரவர் அவர்கள் இருக்கும் பணியில் (இதுவரை) இருந்துகொண்டே சமூகப் பணி புரிவதில் பெரியாருக்கும் தனக்கும் இருக்கும் வேற்றுமையை விளக்கியும் பேசினார். பின் தலைவர் முடிவுரை கூறி தன் பேச்சை முடித்துக் கொண்டார். செயலாளர் அருணாசலம் நன்றிகூறகூட்டம் இனிது முடிவுற்றது.

மாகாணத்தில் விவசாய டிராக்டர்கள்

1948-49-ல் 35,569 ஏக்கர்களும், 1949-50 ல் 12,414 ஏக்கர்களும் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனவென்றும், இலாகா டிராக்டர்களையும், டோஸர்களையும் வாடகைக்கு விட்டதின்மூலம் 1948-49-ல் சர்க்காருக்கு வருமானம் ரூ. 3,13,788 ஆகுமென்றும் விவசாய மந்திரி தோழர் ஏ. பி. ஷெட்டி 20-ம் தேதியன்று குறிப்பிட்டார். சென்னைமாகாணத்தில் 163 டிராக்டர்களும், 48 டோஸர்களும் வேலைமுறையிலிருந்து வருவதாகவும் மந்திரி தெரிவித்தார்.

கோவை மாவட்ட

திராவிட முன்னேற்றக் கழக

முதல் மாநாடு

★

29-1-50 ஞாயிறு காலை 8 மணிக்கு

கணியூர், தோழர்

த. அ. முஹமது உசேன் ராவுத்தர்

அவர்கள் இடத்தில் அமைந்திருக்கும்

"அர்ச்சுனன் பந்தலில்" நடைபெறும்

நகைச்சுவை அரசு

என். எஸ். கிருஷ்ணன் அவர்களின்

வில்லுப்பாட்டுடன் மாநாடு துவங்கும்

மாநாட்டுத் தலைவர், கொடி உயர்த்துபவர் :

தோழர் ப. உ. சண்முகம்

(திருவண்ணாமலை நகராண்மைக் கழகத் தலைவர்)

மாநாட்டைத் துவக்குபவர் :

தோழர் ஜி. பி. சோமசுந்தரம்

(பேளுக்குறிச்சி)

மாநாட்டில் தோழர்கள் :

சி. என். அண்ணாதுரை எம். ஏ.	ஏ. வி. பி. ஆசைத்தம்பி
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.	என். வி. நடராசன்
கே. ஏ. மதியழகன் பி. ஏ.	டி. கே. சீனிவாசன்
க. அன்பழகன் எம். ஏ.	சி. பி. சிற்றரசு
இரெ. இளம்வழுதி பி. ஏ.	ஏ. சித்தையன்
மு. கருணாநிதி	இராம. அரங்கண்ணல்
ஈ. வெ. கி. சம்பத்	கோபி ஜி. என். ராஜு
	எஸ். ஆர். சுப்பிரமணியம்

ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்

★

இரவு 10-மணிக்கு

— சந்திரமோகன் —

நாடகம், தரை ஏ. கே. எஸ். நாடக சபையாரின் சீன் செட்டிங்ஸ்,

போகஸ் லைட்டுகளுடன் மிகச்சிறப்புடன் நடைபெறும்

நாடகத்தில்

தோழர்கள் சி. என். அண்ணாதுரை,

ஈ. வெ. கி. சம்பத், கே. ஆர். இராமசாமி

ஆகியோர் நடிப்பார்கள்

நாடகத்திற்கு

நகைச்சுவை அரசு

என். எஸ். கிருஷ்ணன் அவர்கள்

தலைமைதாங்குவார்

✱

மாநாட்டுக் கட்டணம் :—

வரவேற்புக் கழக உறுப்பினர்	ரூ. 5—0—0
பிரதிநிதிக் கட்டணம் (உணவுபட)	ரூ. 2—0—0
பிரதிநிதிக் கட்டணம்	ரூ. 1—0—0
பார்வையாளர் கட்டணம் (பெண்களுக்கு மட்டும்)	ரூ. 0—8—0

நாடகத்திற்கு டிக்கட் கிடையாது

குறிப்பு :—மாநாட்டிற்கு உணவு ஏற்பாடுகள் சிறந்த முறையில் செய்யப்பட்டுள்ளன. வெளியூர் தோழர்கள் படுக்கையுடன் வரவும்.

கே. ஏ. முருகேசன், செயலாளர்.

பெத்தாம்பாளையம் பி. பழனிச்சாமி, வரவேற்புக் கழகத் தலைவர்.

துணைச் செயலாளர்கள் : கே. என். ஏ. முத்து. எம். உதுமான்.

ஆர். மீனாட்சிசுந்தரம், பொருளாளர்.

டி. வெங்கடாசலம், விளம்பர உறுப்பினர்.

அறிவிப்பு

ரெயின் முட்டைப் பவுடர், முட்டைப்பூச்சி, எறும்பு முதலிய வகைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும் G. பழனியப்பமுதலியார், மதுரை.

வானொலி

24-1-50 செவ்வாய்க்கிழமை)

சென்னை

[311·8 மீட்டர்கள்]

காலை :

7-15 தமிழில் செய்திகள்
7-30 ஆர். நாராயணசாமி-பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
8-50 வீணை (அ. இ. ரே. வீ.)

பிற்பகல் :

12-30 [illegible]ப் பள்ளிகளுக்கு
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
2-00 தமிழில் செய்திகள்
2-15 உயர்தரப் பள்ளிகளுக்கு
2-45 குரல்வளை (இசைத்தட்டு)

மாலை :

4-00 ஆரம்பப் பள்ளிகளுக்கு
5-30 வயலின்
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6 20 வி. சோமசுந்தரம்—பாட்டு

இரவு :

7-00 தமிழில்-பேச்சு
7-15 தமிழில் செய்திகள்
7-30 குரல்வளை (இசைத்தட்டு)
7 45 திருச்சியில் உள்ளபடி
8 50 ஆங்கிலத்தில்—பேச்சு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 சங்கீதம்—நாடகம்
10-30 முடிவு

* * *

திருச்சி

[395·8 மீட்டர்கள்]

காலை :

7-15 தமிழில் செய்திகள்
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 வி. என். நாகராசன்-பாட்டு
8-50 டி. பலராம் கோஷ்டி கிளாரினெட் (இ. த.)

பிற்பகல் :

12-30 [illegible]ப் பள்ளிகளுக்கு
1-00 [illegible] (இசைத்தட்டு)
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 வி. என். நாகராசன்-பாட்டு
2-00 தமிழில் செய்திகள்
2-10 எச். எம். வி. எஸ். வாத்ய கோஷ்டி (இசைத்தட்டு)
2-15 உயர்தரப் பள்ளிகளுக்கு
2-30 நீங்கள் கேட்டவை (இ. த.)

மாலை :

4-00 ஆரம்பப் பள்ளிகளுக்கு
5-40 இசைப்பயிற்சி
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 சித்ரகானம் (இசைத்தட்டு)
6-20 கிராம நிகழ்ச்சிகள்

இரவு :

7-15 தமிழில் செய்திகள்
7-30 இலக்கியரசனை :
7-45 சுப்ரமணியபிள்ளை—பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-35 நீங்கள் கேட்டவை (இ. த.)
10-00 முடிவு.

Printed & Published by T. M. Parthasarathy (Tel : 4502) at the Mercantile Press. 2/45, Muthumari Chetty Street Madras-1.